செ.வெ.எண்:48 நாள்:28.09.2020

**நாமக்கல் மாவட்டம்**

**கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வட்டாட்சியர் அலுவலகங்களில் மண்டல அலுவலர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 67 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.**

-------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிரதி வாரம் திங்கட்கிழமை நடைபெற்று வந்த மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் கொரோனா நோய்த்தொற்று காரணமாக தற்காலிமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அரசு தலைமை செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலி மூலம் மேற்கொண்ட கூட்டத்தில் வட்டாட்சியர் அலுவலங்களில் மண்டல அலுவலர்கள் தலைமையில் மக்கள் குறைத்தீர்க்கும் கூட்டம் நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் இன்றைய தினம் (28.09.2020) நாமக்கல், சேந்தமங்கலம், குமாரபாளையம், ராசிபுரம், திருச்செங்கோடு, மோகனூர், கொல்லிமலை, பரமத்தி-வேலூர் உள்ளிட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் மண்டல அலுவலர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளவாறு சமூக இடைவெளி கடைப்பிடித்தல், முககவசம் அணிதல், கிருமி நாசினி பயன்படுத்துதல் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடைபெற்றது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 67 மனுக்களை மண்டல அலுவலர்களிடம் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்று கொண்ட மண்டல அலுவலர்கள் தகுதியான நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் உடனுக்குடன் வழங்கப்படும் என தெரிவித்தார்கள்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாமக்கல் மாவட்டம்.**